**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No:CC.1215/2022**
**Prosecution Witnesses: 1**

| | | | |
|---|---|---|---|
| Name | : கவிதா | Caste | : |
| Father Name/ Husband Name | : மூர்த்தி | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரி ஆஜர். எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்)
**(06.10.2025)**
**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் திருமங்கலத்தில் குடியிருந்து வருகிறேன். நான் மாவு மில்லில் பணி செய்து வருகிறேன். ஆஜர் எதிரி கலாவதியை எனக்கு தெரியும். கடந்த 2017 வது வருடம் எனக்கு தெரிந்தவர்கள் ஆஜர் எதிரி நம்பிக்கையானவர் என சொன்னதின் பேரில் ஆஜர் எதிரியிடம் நான் சீட்டு போட்டேன். நான் 2 சீட்டும் எனது மகள் ஹேமா 2 சீட்டும், எனது உறவினர் புஷ்பவள்ளி 1 சீட்டும் மொத்தம் 5 சீட்டும் ஆஜர் எதிரியிடம் போட்டோம். சீட்டின் மொத்த தொகை 1 லட்சம் ஆகும். 20 மாதங்கள் கட்டவேண்டும். 2 வது மாதம் மட்டும் அனைவரும் 5000 ரூபாய் கட்டவேண்டும். மற்ற மாதங்கள் சீட்டு ஏல தொகை போவரை பொறுத்து மாத சந்த தொகை ரூ.3500 – ரூ.4000 வரை இருக்கும். 2017 – 2019 வரை மேற்படி சீட்டு தொகையை நாங்கள் தவறாது கட்டிக் கொண்டிருந்தோம். கடைசி சீட்டாக பணத்தை எடுத்துக்கொள்ளலாம் என்றும் கட்டிக்கொண்டிருந்தோம். 2019ம் வருடம் அவசரத்தேவைக்காக ஆஜர் எதிரியிடம் 1,50,000/– லட்ச ரூபாய் (1,50,000) மாதம் 5% வீதமாக வட்டிக்காக மாதம் வட்டி ரூ.7500/–( ஏழாயிரத்து ஐந்நூறு) வட்டியாக

கொடுக்கவேண்டும். நான் வாங்கிய 1,50,000/- லட்ச ரூபாய்க்கு 10க்கு மேல் மாதங்களாக ரூ.7500/- வீதம் ஆஜர் எதிரிக்கு கட்டிக் கொண்டிருந்தேன். அந்த 1,50,000/- லட்ச ரூபாய் கடனுக்காக ஆஜர் எதிரி எழுதப்படாத புரோட்டில் கையெழுத்து வாங்கி கொண்டார். மேலும் எனது கணவர் மூர்த்தி என்பவரது பெயரில் மேலக்கோட்டையில் உள்ள 10 செண்ட் இடத்திற்கான கிரைய ஆவணத்தின் அசலை என்னிடம் இருந்து வாங்கிகொண்டார். இந்நிலையில் 2020 வது வருடம் ஆஜர் எதிரி எனக்கு கொடுத்த 1,50,000/-க்கு வட்டியாக (10%) மாதம் தரவேண்டும் என கூறினார். என்னால் வட்டி கட்ட இயலவில்லை. எனவே நான் கட்டிய சீட்டு தொகையை தருமாறு கேட்டேன். அதற்கு ஆஜர் எதிரி நீ கட்டிய சீட்டு தொகை வட்டிக்கே சரியாகிவிட்டது. நீ மேற்கொண்டு பணம் கொடுத்தால் தான் புரோநோட்டும் எனது கணவர் பெயரில் உள்ள அசல் கிரைய ஆவணத்தையும் திரும்ப தருவேன் என கூறினார். (**ஆவணங்களை குறியீடு செய்யவேண்டி அரசு தரப்பு வேண்டுகோளுக்கு இணங்க முதல் விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது**)